**பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும்**
**ஆராய்ச்சி நிலையம், காரைக்கால்– 609 603**

# புதுச்சேரி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

**(20.01.16 முதல் 24.01.16 வரை)**

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com **தொ. நகல்** (அலுவலகம்):: 04368-261260

**Bulletin No. 006 (01) PJN/GKMS/2016** **Date: 19.01.16**

## கடந்த வார வானிலை 14.01.16 - 18.01.16

| காரணிகள் | கடந்த வார வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 31 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 20-21 |
| மேக மூட்டம் | 1-6 |
| ஈரப்பதம் (%) | 61-87 |
| காற்றின் வேகம் (கி.மீ) | 4-5 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 24.01.16– 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | தேதி **20.01.16** | தேதி **21.01.16** | தேதி **22.01.16** | தேதி **23.01.16** | தேதி **24.01.16** |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 31 | 31 | 31 | 31 | 31 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 22 | 22 | 22 | 22 | 22 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 4 | 4 |
| ஈரப்பதம் (%) | 68-84 | 66-82 | 64-82 | 64-81 | 64-83 |
| காற்றின் வேகம் (கி.மீ) | 4 | 4 | 4 | 4 | 4 |
| காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

குறுஞ்செய்தி:

***வரும் ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவு மேக மூட்டத்துடனும் மற்றும் குளிர்ந்தும் காணப்படும்; மழை இல்லை.***

## வேளாண் அறிவுறை:

- நெல் வயலில் குலை நோய் மற்றும் இலை புள்ளி நோய் தென்பட்டால் ஹெக்டேருக்கு கார்பன்டசிம் 500 கி அல்லது அல்லது டிரைசைகலசோல் 500 கி அல்லது ப்ராபிக்கானசோல் 500 மிலி அல்லது இப்ரோபென்பாஸ் 1000 மிலி அல்லது கசுகாமைசின் 1250 மிலி தெளித்து கட்டுப்படுத்தவும்.
- இலை கருகல் நோயைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு காப்பர் ஹைட் ராக்ஸ்சைடு 1250 கி என்ற மருந்தினை நட்ட 30 மற்றும் 45 வது நாள் தெளிக்கவும் அல்லது 20% பசுஞ்சாணம் அல்லது 5% வேப்பங்கொட்டை கரைசலை இரண்டு முறை தெளிப்பதன் மூலம் இலை கருகல் நோயின் தாக்குதலைக் குறைக்கலாம்.
- நெற் பயிரில் ஆனைக் கொம்பன் ஈயைக் கட்டுப்படுத்த ஹெக்டேருக்கு தையமித்தாக்சாம் 25% WG 150 கிராம் என்ற அளவில் பயன்படுத்திக் கட்டுப்படுத்தவும்.
- நெற் பயிரில் இலை சுருட்டு புழுவைக் கட்டுப்படுத்த ஹெக்டேருக்கு குளோரோன்ட்றானிலிபுருள் (Chlorantraniliprole) 18.5% SC 150 மிலி அல்லது புளுபென்டிமைட் (Flubendiamide) 20% WG 125 மிலி என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தவும்.
- முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சூடோமோனாஸ் ஃபுளோரசன்ஸ் உயிர் பூஞ்சானத்தை 0.5 % (ஒரு லிட்டர் நீரில் 5 மிலி ) 10 நாட்கள் இடைவெளியில் நடவு நட்ட 45 வது முதல், மூன்று முறை தெளிக்கவும்.

முதல்வர்